# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 18 வெள்ளிக்கிழமை 04.10.2024 கதிர் 377







# கொழும்பு வந்தார் ஜெய்சங்கர் ஜனாதிபதியுடன் முக்கிய பேச்சு



இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் ஒருநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்தடைந்துள்ளார். ஜெய்சங்கர் இலங்கை ஜனாதிபதி உட்பட முக்கிய தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திசநாயக்க தெரிவு செய்யப்பட்ட பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்ளும் விஜயம் என்பதால் இந்த விஜயம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

6➤

## வேட்புமனு தாக்கல் இன்று ஆரம்பம்

பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் பணி இன்று ஆரம்பமாகியுள்ளது.

அதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவுசெய்யப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார். இதன்படி, எதிர்வரும் 11ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய எந்த ஒரு அசம்பாவிதமும் இதுவரையில் பதிவாகவில்லை எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, வேட்புமனு தாக்கல் செய்யும் வளாகம் தொடர்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அமைச்சர் விஜித ஹேரத்துடன் ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கருக்கும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் இடையில் சந்திப்பு ஒன்று வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இந்திய வெளிவிவகார

6➤

## அநுரவின் ஆட்சி சிறந்த ஆரம்பம்! சர்வதேசம் ஆதரவளிக்க வேண்டும்

### வலியுறுத்துகின்றார் எரிக் சொல்ஹெய்ம்



சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டும் என தெரிவித்துள்ள இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார தெரிவு செய்யப்பட்டு இரண்டு வாரங்களாகின்றன. இந்த காலத்தை அவர் அவர் சிறப்பாக பயன்படுத்தியுள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடகபதிவில் இதனைத் தெரிவித்திருக்கும், எரிக் சொல்ஹெய்ம், "'சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டும். இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார தெரிவு செய்யப்பட்டு இரண்டு வாரங்கள்ளாகின்றன. இந்த காலத்தை அவர் அவர் சிறப்பாக பயன்படுத்தியுள்ளார்.

அவர் இராஜதந்திர செயற்பாடுகளை மிகச் சரியான முறையில் முன்னெடுத்துள்ளார். முதலில் இந்திய தூதுவருடன் சந்திப்பு, பின்னர் சீன தூதுவருடன், இதன் முக்கியமான நாடு என பார்த்தால் இந்தியாவிற்கே முதலிடம் அதற்கு பின்னரே சீனா என்ற சமிக்ஞையை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் பின்னர் அனைத்து நாடுகளினதும் தூதுவர்களை அவர் சந்தித்துள்ளார். மேற்குலகம் , ரஷ்யா மேலும் பல நாடுகள். இந்தியாவுக்கு முதலிடம் என்ற வெளிவிவகார கொள்கையே பின்பற்றப்படும் என்ற சமிக்ஞையை அவர் வெளியிட்டுள்ளார்.

பதவியேற்றதும் அநுரகுமார திசநாயக்க உடனடியாக கண்டியில் தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அவர் அங்கு மகாநாயக்க தேரர்களின் ஆதரவை பெற்றார்.

அதன் பின்னர் அவர் தமிழ் முஸ்லீம் அரசியல் மததலைவர்களை சந்தித்துள்ளார்.

அனைத்து இனசமூகத்திற்குமான இலங்கையை உருவாக்குவதற்கான அவரது வலியுறுத்தல்கள் வலுவானவையாக காணப்படுகின்றன.

அவர் வர்த்தக சமூகத்தினை நோக்கி தனது கரங்களை நீட்டியுள்ளார். வர்த்தக சமூகத்துடன் இணைந்து நெருக்கமாக பணியாற்றுவதன் மூலமே வளமான இலங்கையை கட்டியெழுப்ப முடியும், கல்வி சுகாதாரம் மற்றும் வறியவர்களிற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வளங்களை கொண்டுவர முடியும் என்பதை அவர் கோடிட்டுக்காட்டியுள்ளார்

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வெற்றிகரமாக முடிவுக்கு வந்துள்ள ஜனாதிபதி - ஐ.எம்.எப். பேச்சுக்கள்



ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றதோடு இது சர்வதேச நாணய நிதியத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது சந்திப்பாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் மூன்றாவது மீளாய்வுக்கு அமைவான எதிர்காலச் செயற்பாடுகள் மற்றும் அதன்போது ஏற்படக்கூடிய தாமதத்தை தவிர்ப்பதற்கான செயற்பாடுகள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

அதேபோல் சர்வதேச நாணய நிதியத்துடனான நேற்றைய சந்திப்பின் போது ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் நோக்கங்களுடன் தான் உடன்படுவதோடு, மக்களுக்கான நிவாரணங்களை வழங்க வேண்டும் என்பதே தனது நோக்கமாகும் என்றும் வலியுறுத்தினார்.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்ளும் அதேநேரம், மக்கள் சுமைகளை குறைப்பதற்கான மாற்று வழியில் செல்வதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் நோக்கமாகும்.

அதற்கான சுமூகமான சூழல் இந்த சந்திப்பின் போது இரு தரப்பினர் மத்தியிலும் உருவாகியதோடு, மூன்று தினங்களாக நடத்தப்பட்ட பேச்சுகள் இன்று வெற்றி கரமாக நிறைவு செய்யப்பட்டன. இதனோடு சாவதேச நாணய நிதியத்தினுடைய இம்முறைக்கான இலங்கை சுற்றுப் பயணமும் நிறைவுக்கு வந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஸ்ண ஸ்ரீநிவாசன், சிரேஷ்ட தூதுக்குழு பிரதானி கலாநிதி பீற்றர் ப்ஷூருயர் உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக்குழுவினர் மற்றும் ஐஆகு பேச்சுவார்த்தைகளுக்கான நியமிக்கப்பட்ட இலங்கையின் பிரதிநிதிகள் குழுவினரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# இராணுவ அழகக நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## வட மாகாண அழகக சம்மேளனம் வலியுறுத்து

“வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள இராணுவ அழகக நிலையங்களை உடன் மூடுவதற்கு ஜனாதிபதியும், ஆளுநரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று வட மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

வடமாகாண அழகக கூட்டுறவு சங்கங்களின் சம்மேளத்தின் சார்பில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு, நீண்டகாலமாக தீர்க்கப்படாது உள்ள தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு அவர் விரைவாக தீர்வு காண்பார் என்ற நம்பிக்கையையும் அழகக சங்கங்களின் சம்மேளனம் வெளியிட்டுள்ளது.

வடமாகாணத்துக்கு சிறந்த நேர்மையான ஒரு ஆளுநரை நியமித்தமைக்கும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ள அழகக சங்கங்களின் சம்மேளனம், புதிய ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனுக்கும் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

வடமாகாண அழகக கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் ஆ.உதயசங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் முக்கியமாகத் தெரிவித்திருப்பதாவது -

“வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள இராணுவ அழகக நிலையங்களை உடன் மூடுவதற்கு ஜனாதிபதியும், ஆளுநரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எங்களது சங்கத்துக்கு தேவையான சட்டரீதியான உதவியை பெற்றுக்கொள்ள ஆலோசனைகளை வழங்கிவரும் தேசிய மக்கள் சக்தியின் வடமாகாண அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரனுக்கு நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

எனவே எங்களது அங்கத்தர்வகளின் நலன் மற்றும் தேவைகள் சட்ட ரீதியான உதவிகளை யார் பெற்றுத்தர முன்வருவார்களானாலும் அவர்களது எழுத்து மூல உறுதிமொழியின் அடிப்படையில் இணைந்து செயற்படுவது தொடர்பாக ஆராய ஆயத்தமாக உள்ளோம்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவருக்கு புத்தகப் பைகள்

பூநகரி பத்தினியார்காட்டு பிள்ளையார் சன சமூக நிலையத்தினரால் சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டது.

சன சமூக நிலையத்தின் தலைவர் திருசே கருணாகரன் அவரது அவர்களது தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பூநகரி பிரதேச சபையின் சன சமூகநிலைய உத்தியோகத்தர் மற்றும் பூநகரி பிரதேச சபை உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து மாணவர்களுக்கு புத்தகப் பைகளை வழங்கி நிகழ்வை சிறப்பித்தனர். புத்தகப் பைகளுக்கான நிதி அனுசரணையை சன சமூக நிலையத்தின் ஸ்தாபகர் சுப்பிரமணியம் வன்னிய சிங்கம் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# யாழ்ப்பாணப். பல்கலைக்கழக பொன் அகவை நாள் நிகழ்வுகள்

## சர்வமதப் பிரார்த்தனை மற்றும் சர்வமத நிகழ்வுகள் ஞாயிறன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திக் ஐம்பதாவது ஆண்டு நிறைவு நாள் நாளை மறுதினம் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சர்வமத நிகழ்வுடன் கொண்டாடப்படவுள்ளது. பொன் அகவை நிறைவு நாளான அன்று பல்கலைக்கழகத்தில் உள்ள இந்து மாமன்றம், பௌத்த சகோதரத்துவ சமூகம், கத்தோலிக்க மாணவர் மன்றம் மற்றும் முஸ்லீம் மஜ்லிஸ் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பல்வேறு மதப் பிரார்த்தனைகள் இடம்பெற்று, கைலாசபதி கலையரங்கத்தில் கூட்டு மத நிகழ்வு இடம்பெறவிருக்கிறது.

அன்றைய தினம் காலை 06 மணிக்கு இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிடேகமும், விசேட பூஜை, சிறப்பு வழிபாடுகளும், பௌத்த சகோதரத்துவ சமூகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச மத்திய நிலையத்தில் பௌத்த மதப் பிரார்த்தனைகளும், காலை 06 மணிக்கு கத்தோலிக்க மாணவர் மன்ற ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக நல்லாயன் நிலையத்தில் விசேட ஆராதனைகளும், பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள இஸ்லாமியத் தொழுகை நிலையத்தில் இஸ்லாமிய மதப் பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார நுழைவாயில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

தொடந்து பலகலைக்கழக நலச்சேவைகள் கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சர்வமத நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக 1974 அக்டோபர் 06ஆம் திகதி இலங்கையின் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பொன் விழா நிகழ்வுகள் கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் இடம்பெற்று வருகின்றன. பொன்விழாவையொட்டி பல்கலைக்கழகத்தினால் ஆண்வு மாநாடுகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் ஒரு அங்கமாக ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் மாநாடும், முத்தமிழ் விழாவும் எதிர்வரும் 07 ஆம், 08 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தர்க்கம் கொலையில் முடிவு

ரம்புக்கனை - கப்பல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மது அருந்திக்கொண்டிருந்த இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்தார்க்கம் பின்னர் கைகலப்பாக மாறியதில் ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒருவர் மற்றைய நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ள நிலையில், தாக்குதலுக்கு இலக்கானவர் ஆபத்தான நிலையில் தலம்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கொத்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மது அருந்திய போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தால் இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக தற்போதைய விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைச்சம்பவம்தொடர்பில் கப்பல - கொட்டவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கத்தியும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# பண்ணை சுற்றுவட்ட பகுதிகளில் இன்று காலை சிரமதானப் பணி

யாழ்ப்பாண பண்ணை சுற்றுவட்டப் பகுதிகளில் இன்று காலை சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதார தரப்பினர், பொலிஸ், இராணுவத்தினரின் பங்களிப்புடன் நடைபெற்ற இந்நடவடிக்கையில் பிளாஸ்டிக் பொருட்கள்சேகரிக்கப்பட்டதுடன் விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் பிளாஸ்டிக் சேகரிக்கும் கூடைகளும் அங்காங்கே வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அருள்ராஜ் ,வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் சமன் பத்திரண, யாழ்ப்பாணம்பிரதேச செயலாளர்சுதர்சன், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், இராணுவ பொலிஸ் உயர் அதிகாரிகள், கடற்படையினர், சுகாதார உத்தியோகத்தர்கள், யாழ் மாநகர சபை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# சுதந்திரக் கட்சி உறுப்பினர் கட்சி தாவுவதற்கு முடிவு?




ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள்சிலர்தேசிய மக்கள்சக்தியுடன் இணைவதற்கு விருப்பம்வெளியிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கெஸ்பாவ தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி கீர்த்தி உடவத்தை இதனை தெரிவித்துள்ளார்.

முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருக்கு ஆதரவளித்த இந்த குழுவினர் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்கு விருப்பம்வெளியிட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

எங்களின் முன்னயை தீர்மானம் தவறானது என்பதை நாங்கள் தற்போது உணர்கின்றோம்,நாங்கள் தற்போது தேசிய மக்கள் சக்தியின் உதவியை கோருகின்றோம்,

உள்ளூராட்சி அளவில் எங்களிற்கு தலைமைத்துவம் உள்ளது,தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளை எங்களால் நடைமுறைப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்

# கல்முனை வைத்தியசாலையில் பாராட்டு விழா



ஜனாதிபதி சூழலியல் வெள்ளி விருதை வென்ற கல்முனை ஆதார வைத்தியசாலையின் பாராட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் டாக்டர் ரங்க சந்ரசேன தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக. மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரும், கிழக்கு மாகாண பதில் மாகாண சுகாதார சேவை பணிப்பாளரும், கல்முனை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகருமான வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் ஆன்மீக அதிதிகளாக சிவஸ்ரீ கோபாலநிரோஷன், பற்றிமா தேசிய கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ. ரெஜினோல்ட் கலந்து சிறப்பித்தனர்.

வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் தாஹிறா சபியுடீன், பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ். இராஜேந்திரன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் (சாய்ந்தமருது ) டாக்டர் என்.ரமேஸ் (கல்முனை வடக்கு), கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி, சிரேஸ்ட ஊடகவியலாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நிகழ்வின் அனுசரணையாளர் சரவணாஸ் உரிமையாளர் என்.பிரகலதன், கல்முனை நெற் பி.கேதீஸ் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக கலந்து கொண்டு விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர்.

நோயாளர் பாதுகாப்பு விருது மற்றும் ஜனாதிபதி சூழலியல் விருதைப் பெறுவதற்கு உதவிய அனைத்து தரப்பினருக்கும் நினைவு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். வைத்தியசாலை ஊழியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் வைத்திய சாலை அபிவிருத்தி குழுவினர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் மாணவர்களுக்கும் பங்குபற்றினர். இன்று ஓய்வு பெறும் தாதிய உத்தியோகத்தர் திருமதி ஜெயந்தி மகேசன் பொன்னாடை போர்த்தி பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார் .

# பொருளாதார மறுமலர்ச்சிக்காக எங்களோடு அணி சேருங்கள்

## அழைப்பு விடுக்கிறார் சபீஸ்.

(மாளிகைக்காடு செய்தியாளர்)

தனிப்பட்ட சுயநலங்களுக்கு அப்பால் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுத்துவதன் மூலம் எமது மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை உருவாக்குவோம். ஆகவே பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த எங்களோடு அணி சேருங்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், அக்கரைப்பற்று அமைப்பாளருமான எஸ்.எம் சபீஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட பல்வேறுபட்ட கிராமங்களில் மக்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் போதே இதனைத் தெரிவித்திருந்தார். தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த அவர்,

இன்று பெரும்பாலான தாய்மார்கள் நாளை பற்றிய கவலையுடனும் அவர்களின் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய அச்சத்துடனே வாழ கின்றனர். அந்நிலைக்கு நாங்கள் முற்றுப்புள்ளி வைப்போம். சிறந்த பொருளாதாரத்தை ஏற்படுத்தவும் குழந்தைகளின் கல்வியில் மாற்றத்தை கொண்டு வந்து அவர்கள் சுய தொழில் முயற்சியாளர்களாக உருவாகவும் நாங்கள் அயராது அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றார்.



# காரைதீவின் புதிய பிரதேச செயலாளருக்கு வரவேற்பு

( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை நிருவாக சேவை அதிகாரி கணேசமூர்த்தி அருணன் அவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை சிவில் அமைப்புகளால் பாரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

முன்னதாக காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு இடம் பெற்றது. பின்னர் அங்கிருந்து மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அவர் அழைத்து வரப்பட்டார். பின்பு பிரதேச செயலாளர் பணிமனையில் மக்களின் வரவேற்பு கூட்டமும் இடம்பெற்றது.

அங்கு அறங்காவலர் சபை செயலாளர் சி. நந்தேஸ்வரன் தலைவர் இ.குணசிங்கம் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வித்தகர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவடி கந்தசாமி ஆலய செயலாளர் சிவகுமார் நன்றி உரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி ஆலய தலைவர்கள் பரிபாலன சபையினர் அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இரத்ததானம் தொடர்பாக கல்முனை அமைப்புகளுடன் கலந்துரையாடல்

*(அஸ்ஹர் இப்றாஹிம்)*

*வைத்தியசாலைகளில் ஏற்படும் குருதிப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் நோக்கில் இரத்த தான பணிகளை செய்கின்ற சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரிகளுக்குமிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று வியாழக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.*

*கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எ.சீ.எம்.மாஹிர் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.*

*அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் றசீக்க ஹசன்த, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம்.பிராஸ், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் கே.வித்யா, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஹெரிசானன்ந் மற்றும் இரத்த தான பணிகளை செய்கின்ற சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.*



# தேர்தலில் பெண்களுக்கான ஒதுக்கீடு?

இலங்கையில் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என கோரிக்கை வலுத்து வருகிறது.

உலகில் பல வளர்ந்த நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைக்கும் முன்னரே இலங்கையில் 1931-ம் ஆண்டே ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சமமான வாக்குரிமை வழங்கப்பட்டது. சிறிமாவோ பண்டார நாயக்க-வை 20.07.1960-ல் முதல் இலங்கை பெண் பிரதமராக மட்டுமின்றி, உலகின் முதல் பெண் பிரதமராக ஆக்கிய பெருமை இலங்கை மக்களுக்கு உண்டு. இதேபோன்று அவரது மகளான சந்திரிகா பண்டாரநாயக்க இலங்கையின் முதல் அதிபராக 1994-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.







இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 52 சதவீதம் பெண்கள் என்ற நிலையில், பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டு 93 ஆண்டுகள் கடந்து விட்டாலும் அரசியல் அதிகாரத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே காணப்படுகிறது. குறிப்பாக, இலங்கை நாடாளுமன்றத்தில் (2020 - 2024) மொத்த உறுப்பினர்கள் 225 பேரில், 12 பேர்கள் மட்டுமே பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். இதில் தமிழர், முஸ்லிம், மலையகத்தைச் சேர்ந்த சிறுபான்மையின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை.

முன்னதாக, இலங்கையில் பெண் உரிமை அமைப்புகளும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்ததன் விளைவாக 2018-ல் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் பெண்களுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு முதன்முறையாக அமல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக இலங்கையில் உள்ளாட்சி சபைகளில் 1.9 சதவீதமும் பெண்களின் இருந்த நிலையில் 1,991 பெண்கள் உள்ளாட்சி சபைகளில் உறுப்பினராக தேர்வாகும் வாய்ப்பினை பெறறார்கள். கடந்த மாதம் இலங்கையில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் இடதுசாரி கட்சியான தேசிய மக்கள் கட்சி (ஜேவிபி) யின் தலைவர் அநுர குமார திசாநாயக்க வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியானார். பதவியேற்ற மறுநாளே தனது கட்சியை சேர்ந்த ஹரிணி அமரசூரியவை இடைக்கால பிரதமராக பதவியில் அமர்த்தினார். இதனால் 24 ஆண்டுகளுக்கு பிறகு பெண் பிரதமர் இலங்கையில் பதவியேற்றார். மேலும், இலங்கையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நவம்பர் 14-ம் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில், வடக்கு மற்றும் கிழக்க மாகாணங்களில் உள்ள அரசியல் கட்சிகளில் இயங்கும் பெண்கள், குழுவாக யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

“தற்போது புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, பெண் பிரதமரை நியமித்து அரசியலில் பெண்களின் அதிகாரத்தைச் சமமாக பேணியிருக்கிறார். இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. தமிழ்பெண்களாகிய எங்களுக்கு அரசியலில் முழுமையாக ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை நாங்கள் சார்ந்துள்ள கட்சிகள் வழங்குவதில்லை.

நாங்கள் நீண்ட காலமாக அரசியல் செயற்பாடுகளில் ஆண்களுக்கு நிகராக பல்வேறு வகையிலும் எங்களது உழைப்பை வழங்கி வருகிறோம். ஆனாலும் அரசியலில் நாங்கள் நேரடியாக ஈடுபடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. இதனால் கற்ற, ஆழமாகச் சிந்திக்கக்கூடிய பெண்கள் அரசியல் இருந்து புறந்தள்ளப்படுகிறார்கள்.

பெண்களுடைய பிரச்சினைகளை வெளியில் கொண்டு வருவதற்கும், பெண்களுக்கு பெண்களே வாக்களிப்பதற்கும் ஆளுமை மிக்க, தலைமைத்துவம் கொண்ட பெண்களை அரசியலில் ஈடுபடுத்த வேண்டும். நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் 50 சதவீத இடஒதுக்கீடை பெண்களுக்கு அளிக்க ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்வர வேண்டும்” என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பல கல்வி கற்ற ஆழமாக உள்ள பெண்கள் அரசியல் இருந்து புறந்தள்ள படுகிறார்கள் எனவே இம்முறை ஜனாதிபதியின் பிரதமரின் வேலை திட்டங்களை முன்மாதிரியாக கொண்டு அனைத்து கட்சிகளும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து இரண்டு பெண்களை ஆவது வேட்பாளராக அறிவிக்க வேண்டும் அவ்வாறு பெண்களும் அரசியலில் ஈடுபடுத்தப்படுகின்ற போதே சரிநிகர் சமமாக பெண்கள் தமது பிரச்சினைகளை வெளியிட்டு கொண்டு வந்து மக்களுக்கு சேவை வழங்க முடியும்

அத்துடன் தற்போது பதவி வகிக்கின்ற ஜனாதிபதி பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற அதே நேரம் பெண் பிரதமரை நியமித்திருக்கிறார்.

எனவே பாராளுமன்றத்தில் பெண்களின் அங்கத்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் இதற்காக கட்சிகள் ஒவ்வொன்றும் பெண் பிரதிநிதிகள் உள்வாங்க வேண்டும் என்ற கோரிக்கையினையும் அனைவரும் முன்வைத்தனர்



# பொதுத் தேர்தல் முடிந்த பின் ஜனாதிபதி டில்லி செல்வார்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயத்தை புதுடில்லிக்கு மேற்கொள்ளவார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவிற்கு சென்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்திக்கும் முதலாவது உயர்மட்ட வெளிநாட்டு பிரமுகர் ஜெய்சங்கர் ஆவார்.

இந்த நவம்பர் 14 இல் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் பின்னர் ஜனாதிபதியின் இந்திய விஜயம் இடம்பெறும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

# மட்டு மாவட்டத்தில் 15 சுயேச்சைகள்



நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகியது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நியமனப் பத்திரம் ஏற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட தெரிவித்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான ஜேஜே முரளிதரன் தெரிவித்தார். மாவட்டத்தில் 15க்கும் மேற்பட்ட சுயேச்சை குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. இன்று முதலாவது நியமன பத்திரம் தாக்கல் செய்யும் நடவடிக்கை இடம் பெற்றது மோகன் டிலான் என்பவரின் தலைமையில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்வற்காக எட்டு பேர் போட்டியிடுகின்றனர் நான்கு லட்சத்தி 49,686 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளார்கள் மட்டக்களப்பு பட்டிருப்பு கல்குடா ஆகிய தேர்தல் தொகுதிகளில் தேர்தல்கள் இடம் பெற உள்ளன.

442 வாக்கு அளிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம் பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வேட்பு மனுத் தாக்கல் நடவடிக்கை ஆரம்பமானது தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பாதுகாப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் அயல்நாடுகளிற்கு முன்னுரிமை மற்றும் சாகர் கொள்கைகளின் அடிப்படையில் இந்த விஜயம் பரஸ்பர நன்மைக்காக நீண்ட ஒத்துழைப்பை மேலும் ஆழமாக்கும் இரு தரப்புகளினதும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜெய்சங்கரின் விஜயம் இரு நாடுகளிற்கும் இடையிலான உறவுகளை மீளாய்வு செய்வதுடன் கொழும்பின் புதிய தலைமைத்துவத்தின் கீழ் எதிர்கால சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயும் வகையில் அமைந்திருக்கும்.

இந்திய முதலீடுகள்,பிராந்திய பாதுகாப்பு,இலங்கையின் சிறுபான்மை தமிழர் தொடர்பான அணுகுமுறை குறித்த அனுரகுமாரதிசநாயக்கவின் நிலைப்பாட்டை புதுடில்லி கேட்டறிவதற்கான வாய்ப்பாக இந்த விஜயம் காணப்படும்.

ஜெய்சங்கர் ஜனாதிபதியை இன்று மாலை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் இந்த சந்திப்பு குறித்து தெரிவித்துள்ளதாவது.

ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்கவை சந்திக்க முடிந்ததை கௌரவமான விடயமாக கருதுகின்றேன். இந்திய குடியரசுதலைவர் திரௌபதி முர்மு மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச்செய்திகளை தெரிவித்தேன்.

இந்திய இலங்கை உறவுகளிற்கான அவரது அன்பான உணர்வுகளிற்கும், வழிகாட்டுதல்களிற்கும் பாராட்டுக்கள். தற்போதைய ஒத்துழைப்புகளை மேலும் ஆழமாக்குவது குறித்தும் இருநாடுகளினது மக்களினதும் பிராந்தியத்தினதும் நன்மைக்காக இந்திய இலங்கை உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் ஆராய்ந்தோம்" என இந்திய அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்திய விமானப்படைக்கு சொந்தமான ஐகுஊ-34 விமானத்தில் இன்று காலை கொழும்பு வந்தடைந்தார்.

அமைச்சர் உட்பட எட்டு உயரதிகாரிகள் அடங்கிய தூதுக்குழுவை வரவேற்க இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் குழுவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குழுவும் வந்திருந்தனர்.

இந்தி ஜயத்தின் போது வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹறினி அமசூரிய ஆகியோரை சந்திக்க உள்ளார்.







# காத்தான்குடி நகர சபைக்கு தீயணைப்பு வாகனம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி நகர சபையின் நீண்ட காலத் தேவையாக காணப்பட்ட தீ விபத்து மீட்பு பிரிவுக்கான தீயணைப்பு வாகனம் ஒன்றினை கொழும்பு மாநகர சபை அன்பளிப்பு செய்துள்ளது.

கொழும்பில் கடந்த வியாளன் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன அவர்களால் காத்தான்குடி நகர சபை கணக்காளர் அஹ்ஸன் தலைமையிலான குழுவினரிடம் கையளிக்கப்பட்டது.

காத்தான்குடி நகரின் நீண்டகால தேவையொன்று நிறைவேறும் இச் சந்தர்ப்பத்துக்காக கடந்த நகரசபை பதவிக்காலத்தில் பாடுபட்ட முன்னாள் நகர முதல்வர் உள்ளிட்ட சபை உறுப்பினர்களும் இதற்காக பல வழிகளிலும் முயற்சித்த அனைவரும் சபையின் செயலாளர் றிப்கா ஷபீன் நன்றி தெரிவித்துள்ளார்.

# 2024 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் ரத்து



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்களில் பல முறைகேடுகள் இருப்பதாகக் கூறி பாதிக்கப்பட்ட 14 ஆசிரியர்களினாலும் ,இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் ஆசிரியர் சங்கத் தலைவர் ப்ரியந்த பெர்னாண்டோ ஆகியோரினாலும் கல்முனை மாகாண மேல் நீதிமன்றத்தில் கட்டாணை (றசவை) மனு கடந்த மே மாதம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஆசிரியர் இடமாற்ற சபை மற்றும் ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டு சபை ஆகியன சரியாகக் கட்டமைக்கப்படவில்லை என்றும் கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக்கொள்கைக்கு முரணாக ஆசிரியர் இடமாற்றங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் கூறி தங்களது இடமாற்றங்களை ரத்து செய்யக் கோரியும் தங்களது மனுவில் குறிப்பிட்டிருந்ததனர்.

நேற்று வியாழக் கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதிவாதிகள் சார்பில் தோன்றிய கிழக்கு மாகாண சபை சட்டத்தரணிகள் பாதிக்கப்பட்ட அனைத்து மனுதாரர்களினதும் இடமாற்றங்களினை இரத்து செய்வதாகவும் அவர்கள் இடமாற்றத்திற்கு முன்னர் எந்தப் பாடசாலைகளில் கற்பித்தார்களோ அந்தப் பாடசாலைகளில் அவர்களை மீள அமர்த்துவதற்கும் எதிர்வரும் காலங்களில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை கண்டிப்பாக பின்பற்றி இடமாற்றங்கள் செய்வதாகவும் உறுதி அளித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து இவ்வழக்கைத் தாக்கல் செய்த பாதிக்கப்பட்ட 14 ஆசிரியர்களினதும் இடமாற்றம் இரத்து செய்யப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கிற்கு சட்டத்தரணிகளான றாஸி முஹம்மட் ஜாபிர் மற்றும் எப். எச். ஏ. அம்ஜாட் ஆகியோர் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பில் தோன்றி காத்திரமான வாதங்களை முன்வைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்





# அகில இலங்கை மட்டத்தில்தங்கம் வென்று சாதனை

(புத்தளம் எம்.யூ.எம்.சனூன், கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

கண்டி திகன உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கு மத்தியிலான மல்யுத்த விளையாட்டுப் போட்டியில் நுரைச்சோலையைச் சேர்ந்த நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் முகம்மது சியாம் முகம்மது அர்கம் 71 கிலோ எடைப்பிரிவில் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் இம்மாணவன் தனது பாடசாலைக்கும் தனது நுரைச்சோலை நகருக்கும் பெருமையை பெற்றுக்கொடுத்துள்ளார்.

நுரைச்சோச்சோலை பாடசாலை வரலாற்றில் விளையாட்டுத்துறையில் ஏலவே தங்கப்பதக்கம் ஒன்றினை தனதாக்கி "தங்க மகன்" என்ற பெருமையை பெற்ற இம்மாணவன் மிகக்குறுகிய காலத்தில் இரண்டாவது தங்கப்பதக்கத்தை வென்று மீண்டும் ஒரு முறை "தங்க மகன்" என்ற பெருமைக்கு சொந்தக்காரராகி தனது தாய் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவர் கடந்த 2023 ல் நடைபெற்ற போட்டியில் மூன்றாமிடம் பெற்று வெண்கலப்பதக்கத்தையும், கடந்த மாதம் இடம்பெற்ற போட்டியின் போது முதலாமிடம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் இத்துறையில் சர்வதேச மட்டத்தில் மேலும் சிறப்பிக்க பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இம்ரான்கான், பிரதி மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், நலன் விரும்பிகள் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகிய மாணவிக்கு கௌரவம்

(எம்.ஏ.றமீஸ்)

இவ்வாண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டு போட்டியில் திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேசுவரர் வித்தியாலய மாணவி எஸ்.கிசார்த்தனா ஈட்டி எறிதல் போட்டியில் இரண்டாமிடத்தினைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கி தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவாகிள்ளார்.

இம்மாணவியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் த.இந்திரன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது மாணவி கிசார்த்தனா மற்றும் மாணவியின் பெற்றோர், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் இ.ஹேமலக்சன், உடற்கல்வி ஆசிரியர்கள் மு.சிவசாந்தன், லட்சுமி திருச்செல்வம் ஆகியோர் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன், நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.10.2024இல் வெளியிடப்பெற்றது.